தென்காசி – வீரகேரளம்புதூரில் – சாலை விபத்தில்

# உயிரிழந்த மூவர் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.30-

தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர், சுரண்டை பகுதி1 கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

தென்காசி மாவட்டம் மற்றும் வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்திலிருந்து வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை காவல் சரகம், ஆணைகுளம் கிராமத்திற்கு 28.8.2024 காலை அன்று சுமார் 06.00 மணியளவில் விவசாய வயல் வேலைக்காக 17 நபர்கள் நான்கு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது வீரகேரளம்புதூர், சுரண்டை பகுதி-1 கிராமம், வாடியூர் மேல்புறம் சாலையின் வளைவில் திரும்பும்போது எதிர்பாராதவிதமாக நான்கு சக்கர வாகனம் தனது கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், வாகனத்தில் பயணம் செய்த தென்காசி வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமம், பள்ளிக்கூடத் தெருவைச் சேர்ந்த திருமதி. வள்ளியம்மாள் (வயது 60) க/பெ. மாடசாமி, திருமதி.பிச்சி (வயது 60) க/பெ.தங்கமணி மற்றும் திருமதி. ஜானகி (வயது 52) க/பெ.ஆறுமுகம் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 14 நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆக.31 – செப். 1 ஆகிய 2 நாட்களில் நடக்கிறது! அட்டவணை வெளியீடு

# சென்னையில்: பார்முலா 4 கார் பந்தயம்!

## இந்தியாவிலேயே முதன் முதலில் இரவு ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டி!

சென்னை,ஆக.30-

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) மூலம் சென்னை ஃபார்முலா 4 ரேசிங் சர்க்யூட் போட்டி மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் கார் பந்தயத்தை நடத்த உள்ளது. வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இந்தியாவில் முதன் முதலில் இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் பந்தயத்தை நடத்த உள்ளது. இதன் மூலம் தெற்காசியாவிலேயே இரவு ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நடத்தும் முதல் நகரமாக சென்னை திகழ்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

3.5 கிமீ சுற்றளவு கொண்ட சர்க்யூட்டில் இப்பந்தயம் நடத்தப்படுகிறது. இந்த சர்க்யூட் தீவு திடல், போர் நினைவுச்சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தா சாலை மற்றும் மவுண்ட் ரோடு ஆகியவற்றில் அமைந்துள்ளது. இது தெற்காசியாவிலேயே மிக நீளமான ஸ்ட்ரீட் சர்க்யூட் எனபது குறிப்பிடத்தக்கது.

**ஆகஸ்டு 31 ஆம் தேதி நடைபெறும் போட்டிகளின் கால அட்டவணை பின்வருமாறு:**

| நேரம் | பந்தயம் | பிரிவு |
|---|---|---|
| 14.30 | JK FLGB F4 | பயிற்சி – 1 |
| 15:10 | F4 INDIAN | பயிற்சி – 1 |
| 15:50 | IRL – DRIVER A | பயிற்சி |
| 16:30 | JK FLGB F4 | பயிற்சி –2 |
| 17:10 | F4 INDIAN | பயிற்சி –2 |
| 17:50 | ENTERTAINMENT | சாகச நிகழ்ச்சி |
| 18:30 | IRL – DRIVER B | பயிற்சி |
| 19:10 | F4 INDIAN | தகுதிச் சுற்று –1 |
| 19:25 | F4 INDIAN | தகுதிச் சுற்று –2 |
| 19:45 | JK FLGB F4 | தகுதிச் சுற்று |
| 20:30 | IRL – DRIVER B | தகுதிச் சுற்று |
| 21:00 | All | பந்தயம் நிறைவு |

| நேரம் | வகுப்பு | பிரிவு |
|---|---|---|
| 14:30 | IRL | ஓட்டுநர் தகுதிசுற்று –A |
| 15:55 | JK FLGB 4 | பிட் லைன் திறப்பு |
| 16:05 | JK FLGB 4 | பந்தயம் –1 |
| 16:50 | F4 INDIAN | பிட் லைன் திறப்பு |
| 17:05 | F4 INDIAN | பந்தயம் –1 |
| 17:50 | IRL | பிட் லைன் திறப்பு |
| 18:05 | IRL | பந்தயம் –1 – ஓட்டுநர் –A |
| 18:45 | ENTERTAINMENT | சாகச நிகழ்ச்சி |
| 19:55 | JK FLGB 4 | பிட் லைன் திறப்பு |
| 20:05 | JK FLGB 4 | பந்தயம் –2 |
| 20:50 | F4 INDIAN | பிட் லைன் திறப்பு |
| 21:05 | F4 INDIAN | பந்தயம் –2 |
| 21:50 | IRL | பிட் லைன் திறப்பு |
| 22:05 | IRL | பந்தயம் –2 – ஓட்டுநர் –B |
| 22:45 | ALL | பந்தயம் நிறைவு |

**கிராண்ட்ஸ்டாண்ட் இருக்கை விவரங்கள்:**

| கிராண்ட்ஸ்டாண்ட் | இடம் | வாகன நிறுத்துமிடம் | நுழைவு அனுமதி |
|---|---|---|---|
| கிராண்ட்ஸ்டாண்ட்–1 | அண்ணா சாலை (முத்துசாமி பாலம் அருகில்) | MMC கிரிக்கெட் மைதானம் | பாக்ஸ் ஆபிஸ் 1 ( நுழைவு வாயில்–2 ) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–2 | சுவாமி சிவானந்தா சாலை | கலைவாணர் அரங்கம் | பாக்ஸ் ஆபிஸ் 3,4 மற்றும் 5 ( நுழைவு வாயில்–4 ) |
| கிராண்ட்ஸ்டாண்ட்–3 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–4 | | | |
| கிராண்ட்ஸ்டாண்ட்–5 | | | |

**தீவுத்திடலில் உள்ள பார்வையாளர் மாடங்களின் விவரங்கள்**

| கிராண்ட்ஸ்டாண்ட் | இடம் | வாகன நிறுத்துடம் | நுழைவு அனுமதி |
|---|---|---|---|
| தங்கம் / பவளம் கிராண்ட்ஸ்டாண்ட் | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| HMR/ஸ்பான்ஸ்சர்கள் ஓய்வறை | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |
| பிரிமியம் ஓய்வறை | தீவுத்திடல் | சென்னை பல்கலைக்கழகம் / கடற்கரை | பாக்ஸ் ஆபிஸ் 5 (நுழைவு வாயில் 6) சென்னை பல்கலைக்கழகம் அருகில்) |

**தடைசெய்யப்பட்ட பொருள்!**

பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தப் பொருளும் அரங்கிற்குள் அனுமதிக்கப்படாது. இந்த பொருட்களை சேமிப்பதற்கான எந்த ஏற்பாடும் இல்லை, மேலும் அவை அனைத்தும் பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பறிமுதல் செய்யப்படும், அவை திரும்பத் தரப்படமாட்டது.



ஓசூர் முதல் பொம்மசந்திரா வரை விரைவான போக்குவரத்து பாதைக்கான அமைப்பை (Mass Rapid Transit System) அறிமுகப்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை இறுதி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், 27.08.2024 அன்று கிருஷ்ணகிரி தனியார் ஹோட்டலில், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே.எம்.சரயு மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .எச்.எஸ். ஸ்ரீகாந்த், ஓசூர் சார் ஆட்சியர் திருமதி.பிரியங்கா ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) டி.லிவிங்ஸ்டோன் எலியாசர் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் ஆவரைக் குளம் பாலையா மார்த்தாண்டம் மேல்நிலைப் பள்ளியில் வைத்து,பழவூர் அரசு மேல்நிலைப் பள்ளி, இராஜ கிருஷ்ணாபுரம் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, கூட்டப்புளி அந்தோனியார் மேல்நிலைப் பள்ளி, செட்டிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளி,வள்ளியூர் அரசு மேல்நிலைப்பள்ளி வள்ளியூர் பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வள்ளியூர் கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி, துலுக்கர்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் 928 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மிதிவண்டிகளை வழங்கினார். உடன் பள்ளி தாளாளர் கணேசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், ஒன்றியக் குழு உறுப்பினர் ஜெயலட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் இந்திரா முருகேசன், வசந்தி முருகேசன், செல்வக்குமார், உட்பட தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

கழக மூத்த முன்னோடி அன்பில் பொய்யா மொழி 25ஆம் ஆண்டு நினைவுநாள்:

# அன்பில் 25: நலத்திட்டம் - மாணவ மாணவிகளுக்கு நினைவுப் பரிசு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்! மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார்- துரை வைகோ எம்.பி. பங்கேற்பு!

திருவெறும்பூர், ஆக.30-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி அன்பில் தர்மலிங்கத்தின் மகனும் தமிழக முதல்வரின் உயிர் நண்பருமான அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் அன்பில் 25 என்னும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் தந்தை அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி அன்பில் அறக்கட்டளையின் சார்பாக தனியார் பள்ளியில் ஏழை எளிய பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளான தையல் மிஷின் வழங்கப்பட்டது. மேலும் தமிழகத்தில் சிறந்து விளங்கும் மாணவிகளுக்கு நினைவு பரிசு மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது. மேலும் நல்லாசிரியர் மற்றும் சிறப்பாக பணிபுரியும் ஆசிரியர்கள், நூலக ஆசிரியர்கள், ஏழை எளிய மாணவர்களுக்கு உதவும் ஆசிரியர்களுக்கு அன்பில் அறக்கட்டளையின் சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, மண்டல குழு தலைவர் மதிவாணன், முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி மற்றும் அன்பில் அறக்கட்டளையைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

மேலும் இந்த விழாவில் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் உரையாற்றியதாவது:- கலைஞர் கூறியதை போல் நாம் அரசியலுக்கு வந்தோம் அரசியலில் பயணித்தோம் என்று இல்லாமல் நாம் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் நம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த அன்பில் அறக்கட்டளை என்றும் இந்த அன்பில் அறக்கட்டளை மூலம் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருவதாகவும் நான் வேலைக்காக அலைந்து திரிந்த பொழுது எனது காலணிகள் தேய்ந்து காணப்படும் அப்பொழுது உழைப்பின் முக்கியத்துவம் என்ன என்பதை நான் அறிந்திருந்தேன் என்றும் எனவே, வேலைக்காக அன்றாடம் பாடுபடும் இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் இந்த அன்பில் அறக்கட்டளை என்றும் இந்த அன்பில் அறக்கட்டளை மூலம் எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மாணவ மாணவிகளுக்கு நாங்கள் செய்து வருவதாகவும் எனவே பெற்றோர்களிடம் நான் தாழ்மையாக கேட்டு கொள்வது என்னவென்றால் பக்கத்து வீட்டு பையன் படிக்கிறான் நீ எவ்வாறு படிக்கிறாய் என்று தனது பிள்ளையை திட்ட வேண்டாம் என்றும் அவனைத் தாழ்வு மனப்பான்மைக்கு தள்ள வேண்டாம் எனவும் எடுத்துரைத்தார்.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# சைதை மேற்குப் பகுதியில் வட்ட வாரியாக ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. அறிவிப்பு!

சென்னை, ஆக. 30-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி தி.மு.க வட்டங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார் என பகுதிக்கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் நடத்திட தலைமை கழக அறிவிப்புக்கிணங்க.... சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி சைதை மேற்கில் அடங்கிய 139-139(அ) 140-140(அ) 142-142(அ) ஆறு வட்டங்களில் வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் மற்றும் மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட மாவட்ட பொருளாளர் திருமதி வாசுகி பாண்டியன் ஆகியோரும் பங்கேற்க உள்ளனர்.

இக்கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெற உள்ளது.

நாள் / நேரம் இடம் தலைமை

142 வட்டம் - 31.08.2024 சனிக்கிழமை மாலை 5 மணி - பி.எஸ்.டி. திருமண மண்டபம், கொத்தவால்ச்சாவடி தெரு, சைதை - எம்.நாகா வட்டச் செயலாளர்

139 அ வட்டம் - 31.08.2024 சனிக்கிழமை மாலை 6 மணி - 21/24, வள்ளுவர் தெரு, ஜாபர்கான் பேட்டை, த. சேகர் இல்லம் - சை.மு.சேகர் வட்டச் செயலாளர் 140 அ வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி - அண்ணாமலையார் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம் - ந.தமிழரசு வட்டச் செயலாளர்

140 வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி- நாகரத்தினம்மாள் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம் - எம்.ஸ்ரீதரன் வட்டச் செயலாளர்

139 வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி- கலைஞர் பவளவிழா திருமண மண்டபம், வடிவேல் தெரு, ஜாபர்கான் பேட்டை - அட்கோ கமலநாதன் வட்டச் செயலாளர்

142 அ வட்டம் - 01.09.2024 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணி - ஸ்ரீ விஜயராகவலு திருமண மண்டபம், பெருமாள் கோயில் தெரு, சைதை - எஸ். பி. கோதண்டம் வட்டச் செயலாளர்

மேற்கண்ட பொது உறுப்பினர்கள் கூட்டங்களில் தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள்,

மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் கழக முன்னோடிகள், கழக ஆதரவாளர்கள்,

கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து கழக தோழர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு சைதை மேற்கு பகுதி செயலாளரும், பத்தாவது மண்டலக்குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி ஊராட்சி ஒன்றியம் சயனபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமினை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதில் 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெ.யு.சந்திரகலா, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வடிவேலு, ஒன்றியக் குழு உறுப்பினர் சுகந்தி தாசில்தார் ஜெயபிரகாஷ், ஊராட்சி மன்ற தலைவர் பவானி வடிவேலு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.